RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt224s1346

OPEN ACCESS

# பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உலகியல் சார்ந்த வாழ்வியல் நெறிகள்

**க. ராதிகா** [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620018, தமிழ்நாடு, இந்தியா

# The Principles of Worldly Life in the Books of Pathinenkilkanakku

**K. Rathika** [a, *]

[a] Department of Tamil, Cauvery College for Women (Autonomous), Tiruchirappalli-620018, Tamil Nadu, India

* Corresponding Author: drrathikak@gmail.com

Received: 20-06-2022
Revised: 07-08-2022
Accepted: 23-08-2022
Published: 28-11-2022

**ABSTRACT**

The ancient Tamil scholars thought with a rich sense of knowledge and a sense of self-ownership of the disciplines and ethics of life which are beneficial to the life of human society. They have meticulously studied the various aspects of human life and the objects of the world and classified them as Agam, Puram, etc. Even before the time of Tolkappiyar, there were many books on charity written in Tamil based on dharma. The Tolkappiyam refers to them as 'Muthumozhi (adage)', 'Vayurai Vaazhthu (Minor Literary Genre)' and 'Seviarivuruvu (a part of Purananooru)'. They could not have been well-developed in justice and moral literature. In this context, many moral books have appeared and developed in Tamil from time to time. The epic and the minor genres of literature refer to the four concrete objects of virtue, wealth, happiness, and home. However, in the history of Tamil literature, books that originated with the aim of conveying only justice are regularly found. From the third century A.D. to the 6th century A.D., such jurisprudence appeared in abundance during the Sangam period. The purpose of this article is to classify the worldly and ethical way of life that has been studied in the moral books and moral texts, as well as the individual social and political ethics of the time, and to understand the social and political ethics of the time.

**Keywords:** Ancient Tamil, Tamil Literature, Moral Literature, Sangam Period

## முன்னுரை

உலகத்தில் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை முறைகளை ஒழுங்குபடுத்திக் கூறும் உயரிய வாழ்க்கைப் பற்றிய சிந்தனைகளை 'வாழ்வியல் நெறிகள்' என்னும் சொற்றொடர் குறிக்கும். தனிமனிதன், குடும்பம், சமுதாயம், துறவு ஆகியனவற்றுக்கென வரையறுக்கப்பட்ட ஒழுங்குபடுத்தப்பட்ட விதிமுறைகள் உள்ளன. அவற்றை நெறிப்படுத்தும் முறைப்படுத்தும் சமுதாயமாக கூடி வாழும் மக்களின் வாழ்க்கையில் அமைதியை நிலைநாட்டும் பொறுப்பு அரசுக்கு உள்ளது. பொதுவாக உலகியல் சார்ந்த வாழ்க்கை நெறிகள் இல்லறம், துறவறம் என்னும் இரண்டு பெரும் பிரிவுக்குள் அடங்கி விடுகின்றன. இவ்விரண்டு அறங்களும் நல்லறங்களாகத் திகழும் போதுதான் சமுதாய வாழ்க்கை செம்மையுற்றதாக அமையும். இல்லறத்தையும் துறவறத்தையும் சமுதாயத்தையும் நெறிப்படுத்தும் பொறுப்பும் கடமையும் நாட்டை ஆளும் மன்னவனுக்கு உள்ளது. ஆதலால் நாட்டை ஆளும் மன்னவன் கொடுங்கோலனாக இருத்தல் கூடாது. செங்கோல் ஆட்சி முறையே குடிமக்கள் வாழ்க்கைக்கு நன்மையைத் தரும். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அற நூல்களும் நீதி நூல்களும்

மிகுதியாக உள்ளன. அந்நூல்கள் அறம் சார்ந்த வாழ்வியல் சிந்தனைகளையும் புத்தொழுக்கங்களையும் தனிமனிதன், இல்லறம், துறவறம், சமுதாய நலன், அரசியல் என்ற நிலைகளில் பல தளங்களில் பல்வேறு கோணங்களில் வெளிப்படுத்துகின்றன. ஆதலால் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இடம்பெற்றுள்ள வாழ்வியல் சிந்தனைகளை வகைதொகைப்படுத்தி விளக்கமாகவும் விரிவாகவும் உலகியல் சார்ந்த வாழ்வியல் நெறிகளை ஆராய்கிறது இக்கட்டுரை.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் காணலாகும் உலகியல் சார்ந்த வாழ்வியல் நெறிகளை, “அரசியல் சார்ந்த வாழ்வியல் சிந்தனைகள், கல்விச் சிந்தனைகள், நட்பு குறித்த வாழ்வியல் சிந்தனைகள், ஈகை, கொடைப் பண்புகள் குறித்த வாழ்வியல் சிந்தனைகள், புகழும் பெருமையும் குறித்த வாழ்வியல் சிந்தனைகள், சினம் கொள்ளாமை குறித்த வாழ்வியல் சிந்தனைகள்” அறநெறி சிந்தனைகள் என்னும் பெரும்பிரிவுகளாக வகைதொகைப்படுத்தி ஆராயப் பெற்றுள்ளன (Manickanar, 2007). அறம் என்ற சமண சமயக் கோட்பாடு பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் வாழ்வியல் நெறிகளாக வெளிப்பட்டு நிற்கின்றன. திருக்குறள் சிந்தனைகளை அடியொற்றியே பெரும்பாலான பதினெண்கீழ்க்கணக்கு - நூல்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருள் சிந்தனைகளின் அடிப்படையில் வாழ்வியல் நெறிகளைப் பேசுகின்றன.

## அரசியல் சார்ந்த வாழ்வியல் சிந்தனைகள்

மனிதனின் நடத்தையை ஒழுங்குபடுத்தத் தேவைப்படும் சட்டதிட்டங்களை நிறைவேற்றவும் அவற்றை நடைமுறைப்படுத்தவும் ஓர் அமைப்பு தேவை. அந்த அமைப்பை 'அரசாங்கம்' என்றும் அரசாங்கத்தைப் பெற்ற ஒரு சமூகத்தை 'அரசு' என்றும் அழைக்கின்றனர். அரசாங்கம் சட்டத்தை இயற்ற ஒரு சட்டமன்றத்தையும் சட்டங்களை நடைமுறைப்படுத்த ஓர் ஆட்சித் துறையையும் சட்டங்களை மீறி நடப்பவர்களைத் தண்டிக்க ஒரு நீதிமன்றத்தையும் பெற்று திகழ்கின்றது. மனிதன் அரசாங்கத்துடனும் அரசுடனும் கொண்டுள்ள உறவுகளை ஆராயும் துறையே அரசியலாகும்.

“அரசியல் என்பது நாகரீகமடைந்த ஒரு சமூகத்தின் அரசாங்கம், அடிப்படைச் சட்டம், மக்கள் ஒருவரோடு ஒருவர் கொண்டுள்ள தொடர்புகள், அவற்றை வகுத்துக்காக்கும் நியதிகள், சமூக நிலைகள், அவற்றின் குறிக்கோள்கள் என்பவற்றைப் பற்றிக் கூறும் அறிவுத்துறையாகும் (Virgin Chikamani, 1978)." அரசியல், அரசு, அரசாங்கம் தொடர்பாகத் தோன்றும் எண்ணற்ற சிக்கல்களை ஆராய்ந்து முடிவு காணும் ஓர் ஒப்பற்ற துறையாகும்.

## கவிதையும் அரசியல் சார்பும்

கலைகளில் ஒன்றாகிய கவிதை, கவிஞனின் அனுபவத்தை வெளிப்படுத்துகிறது இதை, "அரசியல்வாதிகளும் அறிவியல் அறிஞர்களும் கவிதை கேட்போரிடம் ஏற்படுத்தும் விளைவுகளில் அதிகக் கவனம் செலுத்துகின்றனர். இவர்கள் கவிதைகளின் முக்கியமான பணி அறிவுறுத்துவதன் மூலமும் எடுத்துக்காட்டுதலின் வழியேயும் மக்களின் அரசியல் சமுதாய ஒழுக்கத்தை மேம்படுத்துவதாகும்" என்று சுட்டிக்காட்டுகிறார் (Stanford, 1980). சங்கத் தமிழ் இலக்கியங்களில் புறப்பாடல்களில் வாழ்க்கைப் பற்றி அக்கால மக்கள் கொண்டிருந்த கருத்துக்களைக் காணமுடிகின்றது. சங்கப்பாடல்கள் வாழ்க்கை உண்மையையும் உலகியல் நீதியையும் எடுத்துப் பேசுகின்றன.

“நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்

அதனால்

யானுயிர் என்ப தறிகை

வேல்மிகு தானை வேந்தர்க்குக் கடன்"

என்னும் புறநானூற்றுப் பாடல் அரசியல் பற்றிய கருத்தைப் புலவர் வேந்தனுக்கு அறிவுறுத்துவதாக அமைந்துள்ளது. அரசியல் செம்மையாக நடப்பதற்குரிய கருத்துக்களைப் புலவர்கள் அரசர்களுக்குப் புறநானூற்றுப் பாடல்களில் எடுத்தியம்பியுள்ளனர் (Swaminatha Iyer, 2014). சங்கப்பாடல்கள் வாழ்க்கையைப் பற்றிய விமர்சனமாகவும் நீதி கருத்துக்களைக் கூறும் வாயிலாகவும் அமைந்திருக்கின்றன.

"அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே

கோடி யாத்து நாடு பெரிது நந்தும்"

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் அரசன் குடிமக்களிடம் வரிகொள்ளும் முறையைக் கூறுகின்றன. மனிதன் உள்ளத்தில் தோன்றுகின்ற கருத்துகளின் உணர்ச்சி வெளிப்பாடே இலக்கியமாகும். ஒர் இலக்கியம் தன்கால அரசியல் சமுதாயப் பின்னணிகளைக் கலை நுணுக்கத்துடன் வெளிப்படுத்துமானால் அதுவே 'இறவா இலக்கியமாகக் கருதப்படுகின்றது (Swaminatha Iyer, 2014).

## பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அரசியல் சிந்தனைகள்

திருக்குறளில் பொருட்பாலில் அரசியல், அங்கவியல் என்னும் இரண்டு இயல்களிலும் அரசியல் தொடர்பான சிந்தனைகள் பேசப்பட்டிருப்பதை காணுகின்றோம். இறைமாட்சி, கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை, குற்றங்கடிதல், பெரியாரைத் துணைக்கோடல், சிற்றினம் சேராமை தெரிந்து செயல்வகை, வலியறிதல், காலமறிதல் இடன்அறிதல், தெரிந்துதெளிதல், தெரிந்து வினையாடல், சுற்றம் தழால், பொச்சாவாமை, செங்கோன்மை, கொடுங்கோன்மை, வெகுவந்த செய்யாமை, கண்ணோட்டம், ஒற்றாடல், ஊக்கம்உடைமை, மடியின்மை ஆழ்வினை உடைமை, இடுக்கண் அழியாமை ஆகிய 25 அதிகாரங்களில் திருவள்ளுவர் அரசியல் சிந்தனைகளைச் சுட்டிக் காட்டிப் பேசுகின்றார்.

அரசருள் தலை சிறந்த அரசன் யார்? எனக் குறிப்பிட வந்த வள்ளுவர் வலிமைமிக்க படை வரிசை, நல்லொழுக்கம் மிகுந்த குடிமக்கள், திரட்சியான பொருள்வளம், திறமையும் ஆற்றலும் கொண்ட அமைச்சர்கள், அண்டை நாட்டரசர் நட்பு, நல்ல பாதுகாவல், அரண் ஆகிய ஆறினையும் நிறைவாக பெற்றவனே அரசர்களுக்கும் தலைமை சான்ற அரசனாக இருக்கும் தகுதி படைத்தவன் ஆவான் என்கிறார். அச்சமில்லாத துணிவு, இல்லை என்று கூறாமல் இரவலர்களுக்கு வழங்கும் கொடைத்தன்மை, தெளிந்த அறிவு, தளர்ச்சியில்லாத ஊக்கம் ஆகிய நான்கினையும் திருவள்ளுவர் அரசருக்கு உரிய அடிப்படைத் தகுதியாகவும் இயல்பாகவும் குறிப்பிடுவதும் கருதத்தக்கதாகும்.

"படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்

உடையான் அரசருள் ஏறு"

"அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும்

நீங்கா நிலன் ஆள் பவர்க்கு" (Parimelalhagar, 1986)

நேர்மை தவறாமல் செயல்பட்டு நடுவு நிலைமையுடன் நீதி வழங்கிக் குடிமக்களைக் காப்பாற்றும் மன்னவன் குடிமக்களின் தலைவன் என மதித்துப் போற்றப்படுவான் என்பதை திருவள்ளுவர்,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு

இறையென்று வைக்கப் படும்"

எனக் குறிப்பிடுகின்றார் (Parimelalhagar, 1986).

பழமொழி நானூறில் பரவலாக அரசியல் சிந்தனைகளைப் பேசியுள்ளார் (Munurrairayanar, 1974). அவர் ஏழை அழுத கண்ணீர் எமனாகும் என்கிறார்.

"தோற்றத்தால் பொல்லார் துணையில்லா நல்கூர்ந்தார்

மாற்றத்தால் செற்றார் என வலியார் ஆட்டியக்கால்

ஆற்றாது அவர் அழுதகண்ணீர் அவைஅவர்க்குக்

கூற்றமாய் வீழ்ந்து விடும்"

பிறப்பினால் தீயசெயலை உடையவரும் கொடுங்கோல் மன்னரும் வல்லமை படைத்தவர்களும் வறுமை உடையவர் சொற்களால் பகைவரை ஒத்தவர் என நினைத்து எளியவரைத் தங்கள் குடிப்பிறப்பு, துணை, செல்வவலிமை ஆகியவற்றின் பலத்தினால் துன்புறுத்தினால், வறியவர்களாகிய அந்த ஏழையர் அத்துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் வடிக்கின்ற கண்ணீர், அத்துன்பங்களைச் செய்தவருக்கு எமனாக அமைந்துவிடும் என்கிறது பழமொழி நானூறு (Munurrairayanar, 1974).

இவ்வாறு பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பரவலாக அரசியல் சிந்தனைகள் பயின்று வந்து இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மன்னனின் கொடுங்கோல் ஆட்சியைக் கடிந்து செங்கோல் ஆட்சி முறையின் சிறப்புகளையே பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தும் வலியுறுத்துகின்றன.

## கல்விச் சிந்தனைகள்

திருக்குறளில் 'கல்வி' 'கல்லாமை' என்னும் இரண்டு அதிகாரங்களில் கல்விச் சிந்தனைகள் வலியுறுத்தப்பட்டியிருக்கின்றன. கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக அவர் கல்வி, கல்லாமை ஆகிய அதிகாரங்களைத் தொடர்ந்து 'கேள்வி' என்னும் அதிகாரத்தையும் அமைத்துள்ளார்.

கற்க வேண்டிய நூல்களைப் பழுதறப் படிக்க வேண்டும் அவ்வாறு குற்றம் நீங்கப் படித்த பின்னர், படித்த நூல்களில் உள்ள கருத்துக்களின்படி வாழ்க்கையில் நடந்து கொள்ள வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக"

புகழோடு இவ்வுலகில் வாழ விரும்பும் மக்களுக்கு அறிவியல் வழிபட்ட கல்வியும் (எண்ணும்) கலையில் சார்ந்த கல்வியும் (எழுத்து) ஆகிய இரண்டும் இரண்டு கண்கள் என்கிறார் (Parimelalhagar, 1986).

“எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

நாலடியாரின் அரசியலில் முதல் அதிகாரமாக 'கல்வி' எனும் அதிகாரம் அமைந்திருக்கின்றது (Parimelalhagar, 1986). தலை மயிரைச் சீர்படுத்தி முடிப்பதால் வரும் அழகும், முந்தானையில் கரையிட்ட அழகும் மஞ்சள் பூசுவதால் உண்டாகும் அழகும் உண்மையான அழகல்ல மனதளவில் உண்மையாக நடந்து கொள்கிறோம் என்னும் நடுவுநிலையாகிய ஒழுக்க வாழ்க்கையைத் தரும் கல்வி அழகே மிக உயர்ந்த அழகாகும் என்று நாலடியார் பாடல் ஒன்று கீழ்வருமாறு சுட்டுகின்றது.

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்

மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து

நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்

கல்வி அழகே அழகு"

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் நாலடியார் மட்டுமே பெண் கல்வி பற்றியச் சிந்தனையை முன்வைப்பது குறிப்பிடத்தக்கதாகும் (Manickanar, 2007). பெண் கல்வியே சமுதாய ஒழுக்கத்தை நிலைநிறுத்தி ஒழுங்குபடுத்தும் என்னும் கருத்து இப்பாடலில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கல்வியின் சிறப்பை குறிப்பிட வந்த கணிமேதாவியார் ஏலாதியில், கற்றவர் கற்றவரை மதிக்கவேண்டும் கற்றவர்களிடம் ஏற்றத் தாழ்வும் செருக்கும் இருக்கக் கூடாது என்கிறார். தாம் கற்றதை இவர் கற்கவில்லை என்று கற்றவரைப் பற்றிக் கற்றவர் தாழ்வாக எண்ணக்கூடாது நண்பர், உறவினர் ஆகியோரிடம் அன்பில் உயர்வு தாழ்வு காட்டக்கூடாது. வறியவர் துறவியர் ஆகியோர்க்கு உணவு, மருந்து, உடை தங்குமிடம் ஆகியவற்றை அளிக்க வேண்டும் அத்தகையவரே அறிஞர், பண்டிதர், கற்றவர் எனப்படுவர் என்பதை,

"கற்றாரைக் கற்ற துணரார் எனமதியார்

உற்றாரை யன்னணம் ஓராமல் - அற்றார்க்கு

உண்டி யுறையுள் உடுக்கை இவை ஈந்தார்

பண்டிதராய் வாழ்வார் பயின்று"

என்னும் ஏலாதி பாடல் வாயிலாக அறிகின்றோம் (Manickanar, 2007). கற்றவர்களுக்குத் தன்முனைப்புக் கூடாது என்னும் கருத்து இப்பாடலில் வெளிப்பட்டு நிற்கின்றது.

## நட்பு குறித்த வாழ்வியல் சிந்தனைகள்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் நட்புக் குறித்த வாழ்வியல் சிந்தனைகள் மிகுதியாக வலியுறுத்த பட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். திருவள்ளுவர் நட்புக் குறித்த வாழ்வியல் சிந்தனைகளைப் பேசுகின்றார். நல்லவர்களின் நட்பு வளர்பிறைப் போலத் தொடர்ந்து வளர்ந்து நன்மையைத் தரும். தீயவர்களின் நட்பு தேய்கின்ற முழு நிலவைப் போல நாள்தோறும் தேய்ந்து கெட்ட அழிந்துவிடும். இருளைப் போல் துன்பத்தைத் தரும். உடுத்தியிருக்கும் ஆடை நெகிழ்கின்ற போது அதனை சரிசெய்வதற்காக உடனே அதைத விரைந்து ஓடுகின்ற கையைப் போல நண்பனுக்குத் துன்பம் ஏற்பட்ட போது உடனே அதைத் தடுத்து நிறுத்துவதே 'நல்ல நட்பு' என நட்பிற்கு இலக்கணம் வகுத்துள்ளார் வள்ளுவர்,

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்

பின்னர் பேதையார் நட்பு"

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே

இடுக்கண் களைவதாம் நட்பு"

ஒருவன் தாமாக வலியவந்து நட்புக் கொண்டாலும் ஒரு பொருளாக மதிக்கப்படாதவனின் கீழான நட்பை ஏற்காமல் விட்டுவிடல் வேண்டும் என இனியவை நாற்பது அறிவுறுத்துகின்றது (Parimelalhagar, 1986).

"புல்லிக் கொளினினும் பொருளல்லார் தம் கேண்மை

கொள்ளா விடுதல் இனிது"

ஈகை கொடைப் பண்புகள் குறித்த வாழ்வியல் சிந்தனைகள்

ஈகையும் கொடையும் வாழ்வியல் நெறிகளாகப் பேச பட்டிருப்பதை பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் காண முடிகிறது (Parimelalhagar, 1986). ஈகையைத் திருவள்ளுவர் இல்லறவியலின் பிரிக்க முடியாத கூறாகக் கருதுகின்றார். வருகை வழக்கு ஒன்றை கொடுத்து உதவுவதே இனிமையாக்கும் ஈகை என்பதை வரையறுக்க வந்த அவர்

"வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை, மற்றுஎல்லாம்

குறியெதிர்ப்பை நீர துடைத்து"

என குறிப்பிடுவதிலிருந்து இதனை அறியலாம். பொருள் இல்லாத வறியவர்க்கு ஒன்றைக் கொடுத்து உதவுவதே உதவி, ஈகை, கொடை எனப்படும். மற்றதெல்லாம் பயனை (இலாபம்) எதிர்பார்த்துச் செய்யப்படும் 'கொடுக்கல்-வாங்கல்' என்கிறார் வள்ளுவர் (Parimelalhagar, 1986).

வள்ளலுக்கு உரிய சிறப்பான பண்புகளுள் கொடையும் ஈகையும் முதன்மையானவை ஆகும். ஆதலால் செல்வம் பெருகியவிடத்தும் ஏனையோர் அரசனை விட மிகுதியாகக் கொடைச் செயல்களைச் செய்யக்கூடாது என ஆசாரக்கோவை குறிப்பிடுகின்றது. அறிவுடையோர் தம்மிடம் செல்வம் மிகுதியாகப் பெருகியவிடத்தும் கொடைச் செயல்களையும், திருமணங்களையும், செல்வ முயற்சிகளையும், வீடு கட்டுவதையும் அரசர் செய்வதை விட அதிகமாக செய்யக்கூடாது. அவ்வாறு செய்தால் பெருகிய செல்வம் அழிந்து விடும் என்பதை

"அறத்தோடு கல்யாணம் ஆள்வினை கூரை

இறப்பப் பெருகியக் கண்ணும் - திறப்பட்டார்

மன்னரின் மேம்பட்ட செய்யறக் செய்யின்

மன்னிய செல்வம் கெடும்"

தான் தாயை இழந்த குழந்தைக்கும் கணவனை இழந்த விதவை பெண்ணுக்கும் பேச்சில் அந்த வாழ்க்கையில் உடைய உமை இருக்கும் வேண்டிய பொருள்களை கொடுத்து பேணுபவர் மேலும் மிகுந்த பொருள் செல்வத்தை பெற்று மற்றவருக்கு அல்லிதாமும் இன்புற்று வாழ்வர் என கணிமேதாவியார் குறிப்பிடுகின்றார் (Manickanar, 2007).

"தாயிழந்த பிள்ளை தலையிழந்த பெண்டாட்டி

வாயிழந்த வாழ்வினார் வாணிகம் - போயிழந்தார்

கைத்மூண் பொருளிழந்தார் கண்ணிலவர்க்கு ஈந்தார்

வைத்து வழங்கிவாழ் வார்" (Manickanar, 2007)

## புகழும் பெருமையும் குறித்த வாழ்வியல் சிந்தனைகள்

பிறருக்குப் பொருள் முதலானவற்றை ஈதலும் அந்த ஈகைப் பண்பால் பெறுகின்ற புகழும் உயிர் வாழ்தலின் பயன் என வள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு"

ஈதலால் ஒருவன் வாழ்க்கையில் பெறுகின்ற புகழையே உயர்ந்த வாழ்வியல் நெறியாக அவர் கருதுகின்றார். ஆதலால் தான் அவர் ஈகையை அடுத்துப் புகழ் என்ற அதிகாரத்தை அமைத்துள்ளார் (Parimelalhagar, 1986).

பெருந்தன்மை, மென்மை ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல் ஆகிய மூன்றும் உயர் குடியில் பிறந்தவர்களிடம் இயல்பாக காணப்பெறும் குணங்களாகும். பெருஞ்செல்வம் உண்டான காலத்தும் பிறரிடம் இப்பண்பைக் காணமுடிகின்றது. இம்மூன்று குணங்களும் புகழுக்குரிய வாயில்கள் ஆகும்.

"சான்றாண்மை சாயல் ஒழுக்கம் இவை மூன்றும்

வான்தோய் குடிப்பிறந்தார்க்கு"

தம்மைத் தாமே புகழ்தல் கூடாது (Parimelalhagar, 1986). அதைப்போன்று ஒருவன் தன்னைப் புகழ்ந்து கூறும்போது அவன் உறவினன் என்றபோதும் தனக்குப் பொருந்தாத புகழ்ச்சியை அவன் சொன்னால் அவற்றை அறிவுடையோர் நீக்க முயல வேண்டும் என முன்றுரையரையனார் குறிப்பிடுகின்றார்.

"தமரேயும் தம்மைப் புகழ்ந்துரைக்கும் போழ்தில்

அமராத்தனை அகற்ற வேண்டும்"

இவ்வாறு பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் புகழும் பெருமையும் குறித்த வாழ்வியல் சிந்தனைகள் பரவலாகப் பயின்று வந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும் (Manickanar, 2007).

## சினம் கொள்ளாமை குறித்த வாழ்வியல் சிந்தனைகள்

சினம் கொல்லல் தீது என்றும் சினத்தால் பல்வேறு வகையான தீமைகளே விளையும் என்றும் கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தும் வலியுறுத்துகின்றன. வள்ளுவர் வெகுளாமை என்னும் அதிகாரத்தில் சினம் கொல்லாமையை உயரிய வாழ்வியல் அறமாக அறிவுறுத்துகின்றார்.

சினம் பயன் தருமிடத்தில் சினம் கொள்ளாமல் இருப்பவனே சினத்தைக் காத்தவன் ஆவான். சினம் பயன்தராத இடத்தில் அதைக் காப்பதும் காவாததும் ஒன்றே ஆகும். தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்வது என்பது ஒருவன் சினம் கொள்ளாமல் காத்துக் கொள்வதே ஆகும். அப்படிக் காத்துக் கொள்ளாவிடில் அச் சினம் கொண்டவனையே அழித்துவிடும். சேர்ந்தோரையும் நண்பரையும் அழிக்கின்ற சினம் என்னும் உயிர்க்கொல்லி, சுற்றம் என்னும் சொந்தத்துணையையும் சுட்டெரித்து விடும். ஆதலால் வாழ்வாங்கு வாழவிரும்புவோர் வாழ்க்கையில் சினம் கொள்ளக் கூடாது என்பது வள்ளுவர் உணர்த்தும் வாழ்வியல் நெறியாகும்.

"தன்னைதான் காக்கின் சினம்காக்க காவாக்கால்

தன்னையே கொல்லும் சினம்"

"அல்ல புரிந்தார்க்கு அறந்தோன்றா எல்லாம்

வெகுண்டார்முன் தோன்றா கெடும்"

சினத்தால் ஒருவனது செல்வம் கெட்டழிவதால் எப்போதும் ஒருவன் தன்னிடம் உண்டாகும் சினத்தை விட்டொழிக்க வேண்டும் என நான்மணிகடிகை அறிவுறுத்துகின்றது (Parimelalhagar, 1986).

“கெடுப்பின் வெகுளி கெடுத்து விடல்"

ஒன்றைக் கெடுப்பதானால் சினத்தைக் கெடுத்து விடுக என்பது நான்மணிக்கடிகை வலியுறுத்தும் அறவுரையாகும் (Manickanar, 2007).

## அறநெறிச் சிந்தனைகள்

அறம் என்பதை வரையறுத்துச் சொல்ல வந்த திருவள்ளுவர் அறம், தர்மம் நல்வினை, நல்வழி என குறிப்பிடப்படுபவையெல்லாம் மனத்தாலும் பிறருக்குத் துன்பம் நினைக்காத பேராண்மையே என்கிறார். மற்ற செயல்கள் அனைத்தும் வெளிப்பகட்டு என்கிறார்.

"மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்துஅறன்

ஆகுல நீர பிற"

"சிறந்த நுகர்ந்தொழுகும் செல்வமுடையார்

அறஞ்செயல் தருளுடைய ராதல்"

வளமையைத் தருகின்ற செல்வத்தைச் சிறந்தவர்கள் பெற்றால் அச்செல்வத்தைக் கொண்டு மறுமையிலும் இன்பத்தைத் துய்ப்பதற்காக நல்லறங்களைச் செய்ய வேண்டும் எனப் பழமொழி நானூறு அறிவுறுத்துகின்றது (Parimelalhagar, 1986).

"நலனுடைமையின் நானுச் சிறந்தன்று"

ஒருவன் அழகு உடையவனாக விளங்குதலைக் காட்டிலும் பழிபாவங்களுக்கு அஞ்சி நடத்தலே சிறந்த அறமாகும் (Manickanar, 2007).

## முடிவுரை

அரசியல் சார்புடன் கவிதைகளைப் படைப்பது சங்கப்பாடல்களில் இருந்து தொடங்குகின்றது. புலவர்கள் அறிவுறுத்துவதன் மூலமும் எடுத்துக்காட்டுதலின் வழியாகவும் மக்களின் அரசியல் சமுதாய ஒழுக்கத்தை மேம்படுத்த முயன்றுள்ளனர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. மன்னவனின் கொடுங்கோல் ஆட்சியைக் கடிந்துரைத்து, முடியாட்சியில் குடியாட்சியையே வலியுறுத்தி இருப்பது சிந்தனைக்குரியதாகும். மறுமை வாழ்க்கைக்குப் பயன் தருவது இன்பமும் புகழும் கொடுப்பது ஈகை எனக் குறிப்பிட்டும், நட்பின் சிறப்பையும் கல்வியின் மேன்மையும் எடுத்துக் கூறுவதோடு மட்டுமல்லாமல் உலகியல் சார்ந்த வாழ்வியல் நெறிமுறைகளைப் பின்பற்றி நடப்பது அனைவரின் கடமை என்று பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் வலியுறுத்துகின்றன எனலாம்.

## References


Manickanar, V.S. (2007) Pathenen Keelkanaku Noolgal, Manivasagar Pathipagam, Chennai, India.

Munurrairayanar (1974) PalaMozhi Nanooru, Kazhaga Veeliyeedu, Chennai, India.

Parimelalhagar (1986) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Stanford, W.B. (1980) Enemies of Poetry, Oxford University Press, London, UK.

Swaminatha Iyer, U.Ve. (2014) Purananooru Moolam Uraiyum, U.V.SA., Library, Chennai, India.

Virgin Chikamani, G. (1978) Adipadai Arasiyal Kotpadukal, Tamilnadu Padanool Kazhagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License